**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 79 /2020 PW1 .**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சொர்ணாம்பிகா | தந்தை/கணவர் பெயர்: | வெள்ளைச்சாமி |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.01.2026

---

**(1,2 எதிரிகள்ஆஜர். )**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவதன்று சம்பவ சமயத்தில் வாணி என்பவர் வீட்டிற்கு வெளியே நின்று பார்த்து கொண்டிருந்தார். மேற்படி விவரத்தை புகாரில் சொல்லவில்லை. நான் மருத்துவரிடம் 4 ஆண்கள், 1 பெண் என்னை தாக்கியதாகச் சொல்லியுள்ளேன். போலீசார் புகார் கொடுத்த பிறகு என்னை விசாரித்தார்கள் ஆனால் எப்போது விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. போலீஸ் விசாரணையில் எதிரியின் மூன்று மகன்கள் சேர்ந்து என்னை தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஏ.டி.எம். கார்டை போலீசார் எடுத்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. யார் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. கீழ்தளத்தில் கட்டுமானம் ஏற்படுத்த கூடாது என்று போலீசாருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததா என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் கீழ்தளத்தில் கட்டுமானம் ஏற்படுத்தக்கூடாது என்று இருந்தது. அந்த உத்தரவினை நான் போலீசாரிடம் காண்பித்தேன் ஆனால் கொடுக்கவில்லை. எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் போனை புடுங்கி உடைத்து, நைத்து விட்டார்கள் என்று சொல்லியுள்ளேன். சம்பவ நடந்தது ரோட்டில் ஆகும். சம்பவ நடந்த இடத்திற்கு வடக்கே ராஜசேகர் வீடு உள்ளது. தெற்கே காலியிடமாகும். சிவீல் வழக்கில் முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.